**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண்.401/2022**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கள்கிழமை **பி.வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது அலி ஜின்னா | தொழில் | வியாபாரம் |
| த/பெ | முகமது அனிபா | கிராமம் | கிருஷ்ணராயபுரம் |
| வயது | 59 | தாலுகா | கிருஷ்ணராயபுரம் |
| | | மாவட்டம் | கரூர் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை வெங்கடாசலம் அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நானும் வெங்கடாசலமும் ஒன்றாக படித்தவர்கள் என்றால் சரிதான். வாதியும் என்னுடன் படித்தவர். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் குடியிருக்கிறேன். நான் தோகை மலையில் என்னுடைய மாமனார் வீட்டில் குடி இருக்கிறேன் என்றால் சரிதான். நான் பழைய இரும்பு வியாபாரம் செய்கிறேன். 10 வருடங்களுக்கு மேலாக நான் தோகை மலையில் தான் தொழில் செய்கிறேன். வாதி பண வரவு செலவு தொடர்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்திருந்தார் அதை திரும்ப செலுத்தாததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி நிலக்கோட்டையில் குடியிருக்கிறார். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 06.12.2018 மற்றும் 10.12.2018 ஆகிய தேதிகளில் வாதி லட்சுமிநாதன் உடல்நிலை சரியில்லாமல் இரண்டு ஆண்டுகளாக தாராபுரத்தில் தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி

அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதியை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் மனஸ்தாபம் இருந்தது என்றாலும் அதன் காரணமாகத்தான் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதிக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.16 19:35:31 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.